
# கீற்று

SOUTH BAY TAMIL KALVI



தமிழால் இணைவோம், தமிழ்போல் வளர்வோம்!

## இணை ஆசிரியர் உரை

அன்புக்குரிய தமிழ் வாசிப்பாளர்களுக்கு அன்பான வணக்கம்...

சின்னஞ்சிறு குழந்தை முதல் முறை நடை கற்பது போல், நாங்கள் எடுத்து வைத்த முதல் அடியை, அரவணைத்து, அன்பு செலுத்தி கொண்டாடியதற்கு நன்றிகள் பல. இரு கை ஓசை என்பதற்கு இணையாக, கோரிக்கைக்கு இசைந்து கவிதை, கட்டுரை மற்றும் பல வித படைப்புகளை அனுப்பிய அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகள். பழகப் பழகத் தேர்ந்து நடப்பது போல், வெளியான இரண்டாம் பதிப்பிற்கும் நீங்கள் அளித்த ஆதரவுக்கு நன்றி.

வாசித்தல், கற்பனை வாசலைத் திறந்து விடுவதோடு, வலிமையானக் கருத்துக்களை நம் மனதில் பதித்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.
எந்த ஒரு செயலும், ஏற்படுத்தும் தாக்கமே அதன் மதிப்பை, வலிமையைக் காட்டிடும்... அந்த வகையில், வாசிப்பு ஒரு மனிதனின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி நான் சொல்லி வாசகர்களுக்கு தெரியவேண்டியதில்லை.

இந்தப் பதிப்பில், பல்வேறு அறிஞர்களின் மேற்கோள்கள், தமிழ் கல்வி மாணவர்களின் ஓவியங்கள், நெஞ்சைத் தொட்டு நம்மை சிந்திக்க வைக்கும் உண்மைச் சம்பவங்கள் என பல வித படைப்புகளை உங்கள் பார்வைக்கு சமர்பித்திருக்கிறோம்.

தமிழ் வாசித்தல் நம் தலைமுறையோடு முடியாமல், அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சேர்க்கும் விதமாக குழந்தைகளுக்கு பிடிக்கும் வகையில் ஒவ்வொரு பதிப்பிலும், குழந்தைகளுக்கும் படைப்புகள் இருக்கின்றன.

இந்த வாசிப்பு
உங்கள் இதயத்தை மட்டுமின்றி
எங்கள் இதயத்தையும் வருடிடும்...

அன்புடன்..
ரம்யா

# இலக்கியச் சிந்தனை!

## நட்பின் இயல்பு

நம் வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது நட்பாகும் .
மனிதன் மனிதனுக்காக படைத்த இலக்கியம் திருக்குறள்.


நட்புக்காக ஏழு தலைப்பு:
நட்பு, தீ நட்பு ,கூடா நட்பு, பழமை நட்பாராய்தல், சிற்றினம் சேராமை பெரியாரைத்
துணைக்கோடல் என எழுதி இருக்கிறார்.

இந்த 70 திருக்குறளில் கூறாத கருத்தை நிலையாமை என்னும் அதிகாரத்தில் 338ஆம்
குறளில் கூறியிருப்பது நமக்கு வியப்பைத் தருகிறது .

உடம்புக்கும் உயிருக்கும் இடையே உள்ள நட்பு தான் நட்பு என்கிறார்.
உடம்பில் வலி என்றால் உயிர் கவலைப்படுகிறது.
உயிர் கவலைப்பட்டால் உடம்பு இளைக்கின்றது .
உடம்பு அழிந்தால் உயிர் மறைகிறது; உயிர் பிரிந்தால் உடம்பு அழிகிறது.
இத்தகைய உயர்ந்த நட்பும் நிலைக்காது என்கிறார்.

குறள்
குடம்பை தனித்து ஒழியப் புள்பறந்தற்றே
உடம்போ(டு) உயிரிடை நட்பு.





இந்த உயர்ந்த நட்பும் நிலைக்காது என்பதற்கு என்ன காரணம்?
இவ்வுலகில் சில பொருட்களையும்,சில மனிதர்களையும் சில நேரங்களில் விரும்புகிறோம், சில நேரங்களில் வெறுக்கிறோம்.
விருப்பு வெறுப்பின்றி வாழ்ந்தால் துன்பம் நில்லாது போகும்.
காய்கறி வேண்டுமானால் காய்கறி கடைக்குச் செல்கிறோம். பழம் ஙே்டுமானால் பழக்கடைக்குச் செல்கிறோம்.

விருப்பு வெறுப்பின்றி வாழ வேண்டுமானால் விருப்பு வெறுப்பற்ற நிலையில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற ஒருவரது நட்பை பெற வேண்டும்.

இவருடைய நட்பை மட்டும் நாம் பெற்று விட்டால் பிறப்பு முதல் இறப்பு வரை நாம் துன்பமின்றி வாழ முடியுமென்று வள்ளுவர் கூறுகிறார்.
அவர் யார்? என்று கேட்பது கேட்கிறது. அவன் தான் இறைவன்.
அவனுடைய நட்பை மட்டும் நாம் பெற்றுவிட்டால் இவ்வுலகில் துன்பமின்றி வாழ முடியும்
என்கிறார் வள்ளுவர்.


குறள்:
வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

திருக்குறளை படிப்போம், ஆழ்ந்து சிந்திப்போம்! மதிப்பெண்ணிற்காக, மேடை பேச்சிற்காக, எழுத்தாளர் மேற்கோள் காட்ட என்றில்லாமல்,மானுடம் மேன்மையுற மனிதம் தழைக்க, வாழ்க்கை உயிர்ப்புடன் விளங்க குறளை சுவாசிப்போம் .

M.சித்ரா, எம்.ஏ, எம்.எட்,எம்.பில்.,
அங்கப்பா பதின்ம மேல்நிலைப் பள்ளி,
கோவை.

## சிந்தனைத் துகள்கள்

ஒருகோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது "ஒரு நூலகம் கட்டுவேன்" என்று பதிலளித்தாராம் - மகாத்மா



## அழிந்த குருவிகள், அழியாத நினைவுகள்

மரங்கள் நிறைந்த நீலமலைத் தொடர்களின் மத்தியில் அமர்ந்துள்ளது நான் வாழ்ந்த அந்தச் சின்ன வீடு. என் பள்ளிக் காலங்களில், அம்மா அரிசி புடைக்கும் ஒலி கேட்டு, அந்திசாயும் பொழுதுகளில் ஒரு மாபெரும் குருவிக் கூட்டம் கீச் கீச் கீச்சென்ற பாட்டோடு எங்கள் வாசற்படி தேடி வரும். நான் பள்ளிச் சீருடையில் தேநீர் பருகிக்கொண்டே அவற்றின் வருகைக்குக் காத்திருப்பேன். இலங்கை வானொலி கவியரசரின் "சிட்டுக் குருவி முத்தம் கொடுத்து சேர்ந்திடக் கண்டேனே" இசைத்துக் கொண்டிருக்கும்.



தட தடவென கூட்டமாகப் பறந்து வந்து, சுற்றியுள்ள கொய்யா, பீச்சஸ், யூக்கலிப்டஸ், மாதுள மரக்கிளைகளிலும், ரோஜா, வாடாமல்லி, மஞ்சமல்லிச்செடிகளிலும், மேரக்காய், தாட்பூட், பசலைக்கீரை கொடிகளும் அமர்ந்து சுற்றிலும் நோட்டமிடும். பின் ஒவ்வொன்றாக படப் படவென



தரையிறங்கி, தத்தித் தத்தித் தவழ்ந்தும், தன் சிறு இறகில் பறந்தும் நெல்மணிகளை அவசர அவசரமாகக் கவ்வும்.

சாம்பல் நிறமும் பழுப்பும் நிறமும் கலந்த மேனியில் கருப்பு டிசைன்ஸ், வெள்ளைப் பொட்டுகள் போட்டுக் கொண்டிருக்கும் அந்த 100 கிராம் சின்ன உயிர்கள், அவற்றின் முகத்தில் பொருந்திய மஞ்சள் அலகு, கடுகைப்போன்ற இரு கண்கள், கருப்பு நிறக் கூந்தல் அணிந்த தலைகட்டு, பிள்ளையார் தொந்தியைப்போல் அதன் உடல்கட்டு என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தும்.



இவற்றைப் படைக்கும் போது அந்த பிரம்மன் என்ன எண்ணியிருப்பான்? ஏன் இவற்றை இவ்வளவு சிறிதாக படைத்தான்? எதற்கு இவற்றுக்கு பறக்க இறகுகள் கொடுத்தான்? எப்படி இலகுவாக இவை அசையும் கிளைகளிலமர்ந்து காற்றோடு கொஞ்சியபடி, இனத்தோடு உறவாடியபடி ஆனந்தமாய் ஊஞ்சலாடுகின்றன. எங்கே இதனின் கைகள்?
எங்கிருந்து இத்தனை சின்ன உயிர்கள் வருகின்றன? மழையும் காற்றும் புயலும் வந்தால் இவையென்ன செய்யும் என்றெல்லாம் யோசிப்பேன்.

அப்போது அம்மா சொல்வார் இந்தச் சிட்டுக் குருவிகள் ஓட்டு வீட்டுக் கட்டடங்களில், கூரைகளின் இடுக்குகளில், பள்ளிகளில், கோவில்களின் கூரைகளில் தனக்கான கூடுகளை அற்புதமாக தயாரிக்கும். இவை வனத்து ஜீவன்கள் இல்லை. நம்மோடு வாழ்ந்து நாம் உண்ணுவதை உண்ணும் வீட்டுப் பறவைகள் என்று.

இதோ இன்று இப்போது என் தாய்வீட்டு முன் நான். அம்மா அரிசி புடைத்துக் கொண்டிருக்கிறார். நானும் தேநீர் கோப்பையுடன் கவியரசரின் அதே "சிட்டுக் குருவி முத்தம் கொடுத்து" கேட்டுக் கொண்டே காத்திருக்கிறேன். ஆனால் அந்த கீச் கீச் ஒலிகள் இல்லை. சாம்பல் பழுப்பு நிறச் சிட்டுக்கள் ஒன்று கூட காணவில்லை. அரிசி வெந்து சாதம் ஆனபோதும் வயிற்றுப் பசி மறந்து விழிப்பசியுடன் நிற்கிறேன்.

"சிட்டுக் குருவிகள் நம் வாசல் வந்து நிறைய வருடங்களாகி விட்டனம்மா, எல்லாம் அழிந்து விட்டன" என அம்மா சொல்லிக் கொண்டிருக்கிறார்... என் விழிகள் பனித்துக் கொண்டிருக்கின்றன.

-புவனா கருணாகரன்,
எம். எஸ், NJ

## கடி ஜோக்:

நிறைய பங்களாக்கள் இருக்கிற இடம் எது?

வங்காளதேசம்

## தமிழை அறிவோம்

## வே

'தமிழ்' என்னும் சொல்லின் பொருள் இனிமை, எளிமை, நீர்மை என்பதாகும்.
"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்" என்றார் பாரதியார்.

தமிழின் பெருமையைப் பற்றி ஒரு ஆகச் சிறந்த உதாரணம் ஒன்றைப் பார்ப்போம். ஒற்றை எழுத்துக்களில் ஓராயிரம் அர்த்தங்களை தமிழில் புதைத்து வைத்திருந்தான் தமிழன். சமீபத்தில் நான் தெரிந்து வியந்த ஒன்றை உங்களிடம் பகிர்ந்துக் கொள்கிறேன்.

எப்படி நெருப்பை, தீ என்று ஒரு வார்த்தையில் சொல்கிறோமோ, எப்படி மலரை, பூ என்று ஒரு



வார்த்தையில் சொல்கிறோமோ, அப்படித்தான் "வே" என்ற ஒற்றை தமிழ் எழுத்துக்கு மறைத்து வைத்தல் என்பது பொருளாகும்.

இந்த "வே" என்ற எழுத்துடன் தொடங்கும் சொல்லை, தமிழில் எங்கெல்லாம் நாம் பயன்படுத்துகிறோமோ, அங்கெல்லாம் மறை எனப்படும் மறைத்து வைத்தல் என்னும் பொருளுடைய அர்த்தங்களும் உருவாகின்றன.

உதாரணம்: தாவரங்களின் வேரானது மண்ணுக்குள் ஒடி மறைந்துகிடப்பதால் தான் அதனை வேர் என்கிறோம். சுற்றிலும் மறைத்து பாதுகாப்பதினால் தான் அதை வேலி என்கிறோம். சுடும் நீரில் மூலிகைகளையிட்டு அடர் துணிக் கொண்டு நம்மை மூடி மறைத்து அதனை முகர்ந்து



நோய் போக்கும் நிகழ்வை வேது பிடித்தல் என்கிறோம். கண்ணுக்குத் தெரியாத அளவிற்கு மறைவாக, விரைவாகச் செல்வதால் தான் அதை வேகம் என்கிறோம். தன் உண்மைத் தன்மையை வெளியில் காட்டாமல் மறைப்பதால் தான் அதனை வேடம் என்கிறோம். கசப்பை வெளியே காட்டாமல் உள்ளே



மறைத்து வைப்பதால் தான் அதை வேம்பு என்கிறோம். மறைந்து நின்று தாக்குவதால் தான் அவனை வேடன் என்கிறோம். வேட்டை என்ற சொல்லும் அப்படித்தான். புல்லாங்குழலை, வேய்ங்குழல்



என்பார்கள். ஏனென்றால், அது காற்றை அடைத்து அதை மறைத்து சிறுகச் சிறுக வெளியிடுவதால் அதை வேய்ங்குழல் என்றார்கள். இப்படி "வே" என்பது மறைத்து வைத்தல் என்னும் பொருளை பல இடங்களில், பலச் சொற்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நம்முடைய உடல் பாகங்களையும், மானத்தையும் மறைத்துக் காப்பதால் தான் நாம் இந்த துணியை வேட்டி என்று சொல்கிறோம் போல!

**சுபா ஹரி**

## சிந்தனைத் துகள்கள்



வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றாராம்

- நெல்சன் மண்டேலா

## தமிழ் அறிவோம்

Voltage – மின்னழுத்தம்

Sofa – நீள் சாய்விருக்கை

Screwdriver – திருப்புளி

## தமிழை அறிவோம்

1. அந்தி, சந்தி:
அந்தி : மாலை நேரத்திற்கும் , இரவுக்கும் இடையில் உள்ள பொழுது.
சந்தி: இரவு நேரத்திற்கும் , காலை நேரத்திற்கும் இடையில் உள்ள விடியல் பொழுது.

2. அக்குவேர், ஆணிவேர் :
அக்குவேர் : செடியின் கீழ் உள்ள மெல்லியவேர்.
ஆணி வேர்: செடியின் கீழ் ஆழமாக செல்லும் வேர்.


3.அலுப்பு சலிப்பு :
அலுப்பு: உடலில் உண்டாகும் வலி.
சலிப்பு: உள்ளத்தில் ஏற்படும் வெறுப்பும், சோர்வும்.

4.இசகு பிசகு:
இசகு: தம் இயல்பு தெரிந்து ஏமாற்றுபவர்களிடம் ஏமாறுதல்.
பிசகு: தம்முடைய அறியாமையால் ஏமாறுதல்.

5.இடக்கு முடக்கு:
இடக்கு : கேளியாக நகைத்து, இகழ்ந்து பேசுதல்.
முடக்கு : கடுமையாக எதிர்த்து, தடுத்துப் பேசுதல்.

-இராஜேஸ்வரி இராமச்சந்திரன்

# கங்கைகொண்டசோழபுரம்



# ஒரு பிளேட் பிரியாணி

இவ்வாண்டு தொடக்கத்திலேயே ஆரோவிலில் நடந்த விக்கால்ப் சங்கத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு கிட்டியது. அங்கு என்னுள் எழுந்த மாற்றங்கள் மனதளவில் நிறைய ... அங்கு வந்த மனிதர்கள் அனைவருமே சாதித்தவர்களாகவும், சாதிக்க துடிக்கின்றவர்களாகவும் இருந்தார்கள். இயற்கையின் சமநிலை மாறாமல் பேணிக்காப்பதில் வந்திருந்த அனைவரின் எண்ணமும் ஒரு சேர கூடி பயணித்தது.

“வாழ்வின் எல்லைகள் சுருங்கிக் கொண்டு வருவதாக உணரும் போது யாராவது ஒருவர் எதிரில் வந்து சிலவற்றைச் சொல்லி, சிலவற்றைப் பகிர்ந்து முன்னை விடவும் வாழ்வு எவ்வளவு அருமையானது என்று உணர்த்திவிட்டுப் போய் விடுகிறார்கள்.” - வண்ணதாசன்.

அப்படி நான் சந்தித்தவர் தான் ராஜீ . செல்லமாக ராஜீபாய் .. இவர் ஒரு மாற்று திறனாளி மற்றுமல்ல மாற்று சிந்தனையாளரும் கூட .. அதனால் வித்யாசாகர் மாற்று திறன் பள்ளியில் டிரைனராகவும் பணிபுரிகிறார். அவர் நார்மலாக தான் இருக்கிறார், நாம் தான் அப்னார்மலாக இருக்கிறோம் என்பதை செவுளில் அறைந்தாற்ப் போல் சில விஷயங்களைப் பகிர்ந்துச் சென்றார், என்பதை உணரும் வகையில் அவரால் ஒழுங்காக பேச முடியாது, உடன் வந்திருந்த அவர் நண்பர் பாலு அவர் சொல்ல முற்படுவதை தெளிவாக எங்களுக்கு எடுத்துரைத்தார் .. உணர்வு மொழிக்கு உதாரணமாய் இருந்தது அவர்களின் நட்பு. எங்களால் இறுதி வரை அடுத்தவர்களை எதிர்பார்த்தே இருக்க நேரிடுகிறது. ஒரு சராசரி குடும்பத்தில் ஒரு மாற்று திறனாளி மாணவன் இருந்தால் அவனின் பெற்றோர் இருவருமே வேலைக்குச் செல்கிறார்கள். வேறுவழி இல்லை அவர்கள் பிறப்புப்படி உடன் பிறந்தவர்களும் படிக்கச் சென்று விடுகிறார்கள். அக்குழந்தை தனியாக வீட்டில் அடைப்பட்டு இருக்கும் பொழுது உடல் அளவில் மட்டும் அல்லாமல் மனதளவிலும் ஆறாதக் காயத்தை ஏற்படுத்தும் என்ற பொழுது அரங்கம் நிறைந்த அறை அமைதியால் சங்கமித்தது. இயல்பாக நம்மை பக்குவம் பெற்றவர்களாகவே சமூகத்தில் அறிமுகப்படுத்தவே மனம் ஆசைப்படும். அதை சுக்குநூறாக ஆக்கி விட்டு மனிதம் பேசும் ஒரு மனமாக விடைபெற்றார்.. நாம் தாமதப்படுத்தும் ஒரு சிறு செயல், நம்மை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மனிதர்களை எவ்வளவு காயப்படுத்தும் என்பதனை அக்கணம் தான் உணர்ந்தேன்.

சரியா இரண்டு மாதங்களுக்கு முன் என்னை உடல் அளவில் விட்டு சென்ற பாட்டிக்கும் அதற்கு அடுத்த நாள் மங்கைக்கும் பிறந்த நாள் இருந்ததால் இதை ஒன்றாக ஏதோ ஒரு முதியோர் இல்லத்தில் கழிக்கலாம் என்று முடிவு செய்து.. சென்னை போரூரில் உள்ள லிட்டில் ட்ராப்ஸ் என்ற அறக்கட்டளைக்குச் சென்றோம்.
செல்வதற்கு 3 நாட்களுக்கு முன் செல்வராஜ் சாரிடம் பேசினேன். அந்த அறக்கட்டளையின் உரிமையாளர் என்பதற்கான எந்தத் தடயமும் இன்றி வந்த பதில்களே, அங்கு சென்றே ஆகவேண்டும் என்ற எண்ணத்தை தூண்டியது.. சார் என் தங்கைக்குப் பிறந்தநாள்! அங்கு அனைவருக்கும் உணவு அளிக்கலாம் என்று இருக்கேன். என்ன சார் பண்ணனும்? என்று கேட்டேன்... உங்க பட்ஜெட் எவ்வளவுன்னு சொல்லுங்க சார் என்றார். குறிப்பிட்டு சொல்ல முடியலைங்க சார்; ஒரு 5000 என்றேன்.. சாரி சார் நீங்க முழுசா பார்க்காம கால் பண்ணிடீங்க .. இங்க மொத்தம் 500க்கும் மேற்பட்டவர்கள் இருக்கின்றார்கள் என்ற போது ஆடிப்போனேன். சாரி சார் என்ன பண்ணலாம் என்றேன்... ஒன்னு பண்ணுங்க

இவங்களுக்கு சோப்பு இல்லை, ஒரு 40 ரூபாய் ஹமாம் சோப்பு 100 வாங்கிட்டு வாங்க என்றார். அது நம் கணக்குக்கு சரியா இருந்தாலும் மனதளவில் ஏதோ குறைவைத்த பிம்பத்துக்குள்ளே மனம் இருந்தது.. காலை 11 மணியளவில் அங்கு சென்றடைந்தோம்.. மங்கைக்கும் செல்லும் வரை தெரியாது, இது எதற்கான இடம் என்று... இதெல்லாம் இவளுக்கு பிடிக்குமா...? பிறந்தநாள் அதுவுமாக இதெல்லாம் அவள் ஏற்றுக்கொள்வாளா? என்று என்னுள் எழுந்தக் கேள்விகளுக்கு எல்லாம் நானே சமரசம் பேசி வந்தாயிற்று. செல்வராஜ் சாருக்கு கால் செய்தேன். சாரி சார் நான் வேற வேலையா வெளிய வந்துட்டேன். நீங்க உள்ள போங்க, அவங்க பாத்துப்பாங்கனு சொன்னார்.

உள்ளே சென்றதும் வீல் சேரில் அமர்ந்தப் படி கணக்கைப் பார்த்துக் கொண்டு இருந்தார் ஒரு ஐயா .. அவரிடம் அறிமுகம் செய்துக் கொண்டு சார் உள்ள போய் பார்க்கவா என்றோம். ஏதாவது சாப்பிடுங்க என்றவாறே அருகில் கண் அசைத்து பொன்னி, பிளாக் டீ கொடு என்றார். ஒரு அணுகுமுறை போதும் நாம் யார் என்பதை அதிகாரப்பூர்வமாகக் காட்ட ...

நீங்க மா? என்றேன்.. நான் பொன்னி சார்! இங்க எல்லாரையும் பார்த்துக்கிறேன் என்றார் அந்த பெண்மணி.. சார் நாலு டிவிசன் இருக்கு, மாற்று திறனாளிகள் அப்புறம் மெண்டலி டிசேபில்ட். அதுக்கெல்லாம் முன்னாடி இங்கே முதலில் போலாம் என்றார். 500 மீட்டர் இடைவெளி தான் அவ்விடம் .. இருதயம் வேகமாக துடிக்க முகம் முழுவதும் வியர்வையைத் துடைத்துக் கொண்டே உள்ளே சென்றோம். இது தான் சார் இந்த ஹோம் ல கட்டுன முதல் கட்டிடம். சொல்லப்போனால் எங்களுக்கு ரொம்ப ஸ்பெஷல் ஆன ரூம் என்றார். ஒரு பத்துக் கட்டில்கள், அதில் மிகவும் மோசமான நிலையில் வயதானவர்கள் படுத்து சிகிச்சை பெற்று வந்தனர். இவங்களுக்கு என்று ஸ்பெஷலா செஞ்ச பெட் சார் யூரின் மோஷன் இதுலேயே போகலாம். அவங்களால எழுந்திருக்க முடியாதுல சார், என்றார். அம்மாடி! என்று நான் பொன்னியைப் பார்க்க பார்ப்பதன் அர்த்தம் புரிந்தமையால், ஆமாம் சார் எப்பனு சொல்ல முடியாது.. ஆனால் ஒரு மனுஷனோட இறப்பு மட்டும் மோசமா அமையக் கூடாது சார் என்றார். எப்படி மா இதெல்லாம் என்றேன்.கையை நீட்டி ஒரு புகைப்படத்தைக் காட்டினார். அது இந்தக் கட்டிடத் திறப்பு விழாவிற்கு அன்னை தெரசா வந்து திறந்து வைத்தப் பொழுது எடுத்தப் புகைப்படம்.. இதற்கு மேல் ஒரு பதிலை எவ்வாறு கூறுவது... இதை கவனிப்பதில் நாட்டம் செலுத்தினேனே தவிர மங்கையை கவனிக்கவில்லை.. டேய் என்னடா? என்றேன். எதுவும் பேசாமல் கண்கள் பொங்கி ஏதும் இல்ல அண்ணா என்றாள்..



அடுத்து மேலே வயதானவர்கள் அறை என்று கூட்டிச்சென்றார். பேசிக் கொண்டே முதல் அறையில் நுழைந்தோம்... எல்லாரும் பாருங்க! மங்கைக்கு பர்த்டே விஷ் பண்ணுங்க!... என்ற பொழுது அனைவரும் அரைகுறை வார்த்தைகளால் சிறுப் பிள்ளைகள் சொல்வது போல் கூச்சல் மட்டும் வந்தது... கடைசி இருக்கைக்குக் கூட்டிச்சென்று, பாதர்! இவங்களுக்கு பர்த்டே என்றவுடன் பைபிளை எடுத்து கையில் வைத்தபடி பிராத்தனை செய்து ஆசி வழங்கினார். பக்கத்துக் கட்டிலில் இரு கைகளும் ஒழுங்காக செயல்படாமல் கால்கள் முடம் பெற்ற ஒரு அய்யா, பேப்பர் பசையை தன் மணிகட்டால் தொட்டுத் தடவிக்கொண்டு இருந்தார். என்ன அய்யா? என்றேன்...சும்மாவே எப்படித் தம்பி இருக்கிறது! இதெல்லாம் மருந்து கடையில காசுக்கு வாங்கிப்பாங்க என்றார்... (உள்ளம் ஊனம் இல்லை என்பதை உறக்கச் சொன்னது போல் உணர்ந்தேன்.)அடுத்த அறைக்குச் செல்லும் வரை

தெரியவில்லை அங்குதான் மொத்த தாய்மையின் அருளும் உள்ளது என...உள்ளே நுழைந்த அடுத்த கணம் இங்க வாங்க! இங்க வாங்க! என்ற கூச்சல். நம்மை பார்க்க இன்று யாரோ வந்து உள்ளனர் என்ற ஏக்கம்... அருகில் சென்று, பாட்டி இன்று எனக்குப் பிறந்த நாள்! என்று அவள் அறிமுகம் செய்ய, தன் இருகையால் முகத்தை அணைத்து நல்லாயிரு கண்ணு! என்று தந்த முத்தத்தில் முழுமை அடைந்தது அவளின் பிறந்த நாள் ... பொன்னி அவர்கள் சற்று தூரம் சென்ற போது அருகில் இருந்த இன்னொரு பாட்டி, சட்டையை இழுத்து மிக்ச்சர் வாங்கித் தரியா? என்ற போது நொறுங்கிப் போனேன்.. ஐயோ! அம்மா, பக்கத்துல ஏதாவது வாங்கிட்டு வரவா? என்று கேட்டவுடன், பொன்னி அவர்கள் வருவதைப் பார்த்து பதில் எதுவும் பேசாமல் கையை மட்டும் அசைத்துப் பேசாதே என்று



கூறி அமர்ந்தாள். சிரித்தபடியே அவங்க அதெல்லாம் சாப்பிடக் கூடாது சார்; இருந்தாலும் என்ன பண்றது ஆசைக்குக் கேட்பாங்க. ஏதாவது சாப்பிடணும்னு அப்புறம் அதுவே பழகிடும்ல சார். அடுத்தத் தளத்திற்கு அழைத்துச் சென்றார். விடை பெறுகையில் ஒரு வேஷ்டியை மட்டுமே போர்த்திப் படுத்து இருந்த பாட்டி கை நரம்பு அனைத்தும் புடைத்து கண்கள் எல்லாம் சுருங்கித் தலையில் முடி அனைத்தும் இழந்து பா! பா! என்றார்.. அருகில் சென்று அமர்ந்த பொழுது கைகளை இறுகப் பற்றிக் கொண்டு என்ன பாக்க வருவதான? என்ற பொழுது என்னை விட்டு பிரிந்த என் பாட்டியே அழைத்தது போல், வார்த்தைகளற்ற நிலையில் நிலையில்லாமல் நின்றேன்...





கடைசியாக ஒரு அறைக்கு அழைத்துச் சென்றார் பொன்னி. ஒரு 60 நபர்கள் இருந்திருப்பார்கள்.. நுழைந்த மறுகணம் ஹேய் என்று கூச்சலிட்டுக் கொண்டே இருவரையும் பற்றிக் கொண்டார்கள். கொண்டாடினார்கள்.. அன்றுதான் அவர்கள் முகங்களை முதன் முதலாகப் பார்க்கிறோம்..ஆனால் அவர்களுக்கு அப்படி தோன்றவில்லை போலும் ... நம்மிடத்திற்கு வந்தவர்கள் நம்மவர்கள் என்றே நம்புகின்றனர்.

கை குலுக்கல்கள் கணக்கில்லாமல் பகிரப்பட்டது. தீண்டிய கைகளே மீண்டும், மீண்டும் தீண்டியது... இவர்களைக் குழந்தைகளாக பாருங்கள். இவர்கள் என்ன செய்தாலும் கோபம் வராது சார் என்றார் பொன்னி. ஆம்! அவர்கள் வயதில் மட்டுமே மூத்தவர்களாக மனதளவில் குழந்தையாகவே நேரில் கண்டமையால் அவர்கள் செயலை உணர முடிந்தது. அவரவர்களின் குறைகளை கை அசைவுகளாலும், முகபாவனைகளாலும் எங்களுக்குப் புரிய வைக்க முற்பட்டனர். நெற்றியில் எனக்கு அடிபட்டு விட்டது என்பதை ஒரு ஐந்து முறைக்கு மேல் கூறியபடியே கையை இறுகப் பற்றிக் கொண்டு கூறிக் கொண்டே இருந்தாள் அவள். என்ன சொல்லுறாங்க? என்றேன்...ஐயோ! சார் அவள் நெத்தில அடிபட்டுடுச்சாம்; அதுவும் அவளோட ஒன்பது வயசுல... அதை இன்னும் சொல்லிக் காட்டிட்டு இருக்கா என்று கூறி அமர வைத்தார்.. அரை மணி நேரம் அவர்கள் அனைவரிடமும் ஆசி பெற்ற பின் விடை பெற முயன்றோம். அவர்களிடம் ஒரு 2000 ரூபாய் நோட்டைக் கொடுத்தால் கூட என்ன செய்வது என்று தெரியாது... அவர்களுக்கு தேவை உடன் பேச, பகிர, ஒரு நபர்! இறுதியாக பிரிய மனமின்றி வெளியில் வந்து நடந்துச் சென்றுக்

கொண்டிருந்தப் பொழுது மெல்லியக் கை ஒன்று என் கையைப் பிடித்தது ..அத்தருணம் வார்த்தைகளற்ற வித்தியாசமான ஒரு அன்பினால் பிடிக்கப்பட்டேன்.. என்னடா தங்கம் வேணும்? என்று கேட்ட பொழுது என் கையை அவள் இரு கைகளாலும் பற்றிக் கொண்டு பிரியாணி! என்று என்னைப் பார்த்து புன்னகைத்தாள். சரி! வா என்றேன்... உடனே பொன்னி, அவள் அப்படி தான் சார் ... இவளுக்கு மட்டும் எப்படி வாங்கித்தர முடியும்.. அதெல்லாம் வேண்டாம் சார் என்றாள் .. சரி மா, இவர்களுக்கு மட்டும் தனியாக போட முடியாதல்லவா !! மொத்தமா இங்குள்ள அனைவருக்கும் செய்து தர எவ்வளவு ஆகும் என்றேன்... ஒரு 32 லிருந்து 35 ஆயிரம் ஆகும் சார் என்றார்... சாதரணமாக நாம் நினைத்தால் சாப்பிடக் கூடிய ஒரு விஷயம், அவர்களுக்கு வாழ்நாள் ஆசையாக இருக்கிறது என்பதை அன்று தான் உணர்ந்தேன்.. ஏதோ ஒரு உரிமையில் என்னிடம் கேட்டாள் என்று வைத்துக் கொண்டால் கூட, அதை ஏன்? என்னிடம் கேட்க வேண்டும் என்றே எண்ணுகிறேன்...ஏதோ ஒரு நம்பிக்கை அவளுக்குள் நிகழ்ந்து இருக்கின்றது.. அந்த உணர்வுகளைப் பகிரவே இந்தக் கட்டுரை..

உணர்ந்தவனாய்,

**த.சரவணன்**

## கடி ஜோக்:

**மை**க்கேல் ஜாக்சன் ஆடுவாரு,பாடுவாரு.ஆனா உட்காரச் சொன்னா உட்காரமாட்டாரு.ஏன்?

## படப் புதிர்

### இது ஒரு மலர்?


+


### இது ஒரு ஊர்?


+

+


### இது வீட்டை பாதுகாக்கும்?


+




# முதுமையே வாழ்வின் முழுமை!

தத்தி தள்ளாடி நடந்து
தட்டு தடுமாறி பேசி
பல்லில்லாமல் தின்று
புரியாத உலகிலே பழகி
புதியதல்ல இந்த முதுமை இது
மழலை பருவத்தின் மறுமுறை!

பிறை நிலா முழு நிலவென பெருகி பின்
பிறையாய் தேய்வது போலெ வாழ்வில்
நரையை எய்துவதும் அழகே! - வாழ்வின்
நிறையை எய்துவது அழகே!
மூன்றாம் பிறையும் அழகே! - இருபத்து
மூன்றாம் பிறையும் அழகே!

கிளைமாக்ஸ் இல்லாத படம்
பாயசம் இல்லாத பந்தியும் போன்றது
முதுமை இல்லாத வாழ்க்கை எனவே
முதுமையே வாழ்வின் முழுமை!

வந்தியத்தேவன்,TX



சுபா ஹரி



பவித்ரா

## சென்ற இதழ் குறுக்கெழுத்து புதிருக்கான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வ | ள் | ள | 2 லா | ர் | | 3 உ | ற | க் | க | ம் |
| ரி | 4 க | | ப | வ | | டை | | | | ல |
| | | | ம் | தே | | யா | | | 5 ஒ | கு |
| | | | | ர் | | ர் | | 6 பெ | ழு | ரு |
| | | | | வூ | | | | ரி | க் | 12 கு |
| 7 ம | யி | ல் | | ரு | | | | ய | க | |
| ர | | 8 ர | ங் | 9 க | 10 ரா | 11 ஜ | ன் | பு | ம் | |
| க் | | த | | ட | ம | ன | ல | ரா | | |
| கா | | ம் | | ற் | ன் | க | கி | ண | | |
| ல் | | | | பா | | ன் | 14 அ | ம் | பை | |
| | | | | ல | | | | | | |
| | | | | ம் | | 13 மோ | க | மு | ள் | |

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு

SOUTH BAY TAMIL KALVI

keetru@sbtsla.org

வாணி கோபால்சாமி
இணை ஆசிரியர்

சுபா ஹரி
ஆசிரியர்

ரம்யா நரசிம்மன்
இணை ஆசிரியர்